# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு பொது / சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2017 / 2018 (செப்ரம்பர், ஒக்டோபர் - 2020)

# HY/S 3113 History of Sri Lanka from the Earliest Time to AD 1505

# HY/S 3113 இலங்கை வரலாறு புராதன காலம் முதல் கி.பி 1505 வரை

நேரம்: 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும், இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

## பகுதி – I

1. அ) இலங்கையில் பெருங்கற்கால பண்பாட்டிடங்களில் மேற்கொள்ளப்பட்ட அண்மைக் கால ஆய்வுகள் பற்றிச் சுருக்கமாக குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

   ஆ) பெருங்கற்காலப் பண்பாட்டின் பிரதான அம்சங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

2. இலங்கையில் பௌத்த சமயத்தின் வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

   அ) பௌத்த சமயத்தின் அறிமுகம் (10 புள்ளிகள்)

   ஆ) பௌத்தத்தில் ஏற்பட்ட சங்கபேதம் (10 புள்ளிகள்)

3. அ) அனுராதபுர இராசதானியில் காணப்பட்ட அரசன் தொடர்பான சிந்தனைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ) அனுராதபுர கால நீர்ப்பாசனத் தொழிநுட்பங்கள் பற்றிக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

## பகுதி – II

4. புராதன இலங்கையின் சமூக வரலாற்றை இலங்கைப் பிராமிச் சாசனங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (20 புள்ளிகள்)

5. "நீண்ட காலமாக மகாவம்சத்தை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட இலங்கை வரலாற்றில், அண்மைக்கால தொல்லியல் அகழ்வாய்வுகள் மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விமர்சிக்குக. (20 புள்ளிகள்)

6. இலங்கையில் சோழராதிக்கம் ஏற்படுத்திய அரசியல், பொருளாதார, சமூக விளைவுகளை இலக்கியங்கள், தொல்லியற் சான்றுகள் என்பனவற்றை ஆதாரமாகக் கொண்டு தர்க்கரீதியாக ஆராய்க. (20 புள்ளிகள்)

7. இலங்கையில் அந்நியர் ஆதிக்கத்தை இல்லாது ஒழித்தவன் என்ற வகையில் முதலாம் விஜயபாகு பெற்றுள்ள வரலாற்று முக்கியத்துவத்தை நுணுக்கமாக பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)